


14.06.2024

தலைப்புச் செய்திகள்

- இத்தாலி அபூலியாவில் ஜி-7 உச்சிமாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று பங்கேற்கிறார்.
- நீட் நுழைவுத்தேர்வு முறைகேடுகளில் சி.பி.ஐ. விசாரணை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு மத்திய அரசும், தேசிய தேர்வு முகமையும் பதிலளிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- அரசு பள்ளிகளில் பயின்று கல்லூரி செல்லும் மாணாக்கருக்கான தமிழ்புதல்வன் திட்டம் ஆகஸ்ட் மாதம் தொடங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- தமிழ்நாட்டில் 78 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான டெல்டா குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாநில வேளாண் அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.
- கிழக்கு கடற்கரை பகுதியில் மீன்பிடி தடைக்காலம் இன்று நள்ளிரவுடன் முடிவுக்கு வருகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி, இத்தாலி நாட்டின் அபூலியா நகரில் ஜி-7 உச்சிமாநாட்டில் இன்று பங்கேற்கிறார்.

இம்மாநாட்டின் ஒருபகுதியாக இத்தாலி நாட்டு பிரதமர் ஜியோர்ஜியா மெலினியுடன் எதிர்கால திட்டங்களில் இருதரப்பு ஒத்துழைப்பு, அவற்றை முன்னெடுத்து செல்வது குறித்து பிரதமர் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

ஜி-7 நாட்டு தலைவர்களுடனும், இம்மாநாட்டிற்கு அழைக்கப்பட்ட அழைப்பு நாட்டு தலைவர்களுடனும் பிரதமர் கலந்துரையாடுகிறார்.

கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன், அமெரிக்க நாடுகளை உள்ளடக்கிய இந்த ஜி-7 உச்சிமாநாட்டில், செயற்கை நுண்ணறிவு எரிசக்தி, உள்ளிட்டவை குறித்து இந்தியா பேச்சுவார்த்தைகளை முன்னிலைப்படுத்த உள்ளது.

இம்மாநாட்டில் அழைப்பு நாடாக பங்கேற்க இந்தியா அழைக்கப்பட்டுள்ளது, சர்வதேச அரங்கத்தில் நம்நாட்டிற்கான அங்கீகாரத்தை வெளிப்படுத்துகிறது.

இதனிடையே சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு ஆரோக்கியமான வாழ்விற்கு யோகாவை பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி திரிகோணாசனம் செய்யும் காணொலி பதிவை பிரதமர் இன்று சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளார்.

இந்திய தூதரகமும், இலங்கை கிழக்கு மாகாண சுற்றுலா வாரியமும் இணைந்து திரிகோண மலையில் யோககலை நிகழ்ச்சிகளை இன்று நடத்தியது.

இந்நிகழ்ச்சியில் 5 ஆயிரம் மாணாக்கர்கள் கலந்து கொண்டு யோகாசன பயிற்சிகளை மேற்கொண்டனர்.

❖❖❖❖❖❖

நீட்

இளநிலை மருத்துவ படிப்பு சேர்க்கைக்கான நீட் நுழைவுத்தேர்வு முறைகேடுகள் மற்றும் வினாத்தாள் கசிவு குறித்த குற்றசாட்டுகளை ஆராய சி.பி.ஐ. விசாரணை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு மத்திய அரசும், தேசிய தேர்வு முகமையும் பதிலளிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான பொதுநல மனுவை இன்று விசாரித்த நீதிபதிகள் விக்ரம்நாத், சந்தீப் மேத்தா ஆகியோர் கொண்ட அமர்வு 2 வாரங்களுக்குள் பதிலளிக்க ஆணையிட்டுள்ளது.

வரும் 8-ம் தேதி நீட் தொடர்பான விசாரணை எடுத்துக்கொள்ளப்படும் போது இந்த பொதுநல மனுமீதான விசாரணையும் நடைபெறும் என்று கூறியுள்ளது.

❖❖❖❖❖❖

ஜுவல் ஓரம்

மத்திய பழங்குடியின விவகாரத்துறை அமைச்சராக திரு. ஜுவல் ஓரம் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர் பழங்குடியின மக்களின் அடிப்படை தேவைகளான கல்வி மற்றும் சுகாதார திட்டங்களுக்கு உயர் முன்னுரிமை வழங்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖

ஜக்தீப் தன்கர்

உலகளவில் 5-வது பொருளாதார நாடாக இந்தியா திகழ்கிறது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப்தன்கர் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் எல்லை பாதுகாப்பு படையின் 154-வது படைப்பிரிவின் நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், இந்தியா பல்வேறு சாதனைகளுடன் துரித வளர்ச்சி கண்டு வருவதாக குறிப்பிட்டார்.

34 ஆண்டுகளுக்கு முன்னதாக நம்நாட்டின் அந்நிய செலவாணி மிகவும் குறைவாக இருந்ததை சுட்டிக்காட்டிய அவர், ஆனால் தற்போது வாரம் ஒன்றிற்கு பலகோடி ரூபாய் அளவில் வெளிநாட்டு பரிவர்த்தனைகள் அதிகரித்து வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖

குவைத்

குவைத் நாட்டு தீ விபத்தில் உயிரிழந்த தமிழகத்தை சேர்ந்த 7 பேர் உட்பட 31 பேரின் உடல்கள் சிறப்பு விமானம் மூலம் இன்று கொச்சி வந்தடைந்தது.

கேரள முதலமைச்சர் திரு. பினராயி விஜயன், அயலக தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சிமஸ்தான் உள்ளிட்டோர் கொச்சி விமான நிலையத்தில் உயிரிழந்தோர் உடல்களுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்

தமிழகத்தை சேர்ந்த 7 பேரின் உடல்கள் தனித்தனி வாகனம் மூலம் அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖

ஹஜ்

இஸ்லாமியர்களின் புனித கடமையான ஹஜ் யாத்திரையின் ஒருபகுதியாக 20 லட்சத்திற்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் சவுதிஅரேபியா மினாவில் இன்று குவிந்துள்ளனர்.

இதில் 1 லட்சத்து 75 ஆயிரம் இந்திய இஸ்லாமியர்கள் கலந்துகொண்டுள்ள இந்த யாத்திரையில் 1 லட்சத்து 40 ஆயிரம் பேர் ஹஜ் கமிட்டி சார்பாக சென்றுள்ளனர்.

இந்த ஆண்டு 5 ஆயிரம் இந்திய பெண்கள் தனித்து ஹஜ் பயணத்தை மேற்கொள்ள இருப்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖

குற்றவியல் சட்டங்கள்

நாட்டில் புதிய குற்றவியல் சட்டங்கள் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

நாட்டின் எந்த இடத்திலும் குற்றச்சம்பவங்கள் நடைபெற்றாலும் உடனடியாக வழக்கு பதிவு செய்யப்பட்டு பாதிக்கப்பட்டவருக்கு தீர்வுகாண இந்த சட்டம் வழிவகை செய்யும் என்று சேலத்தை சேர்ந்த மத்திய அரசு வழங்கறிஞர் நாச்சிமுத்து ராஜா தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

இடைத்தேர்தல்

விக்ரவாண்டி உட்பட நாடுமுழுவதும் 7 மாநிலங்களில் காலியாகவுள்ள 13 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு வரும் 10-ம் தேதி நடைபெறும் இடைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

மனுக்களை தாக்கல் செய்ய வரும் 21-ம் தேதிவரை காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

வேட்பு மனுக்கள் வரும் 24ம் தேதி பரிசிலிக்கப் படுகின்றன.

அவற்றை திரும்பப்பெற 26-ம் தேதி கடைசி நாளாகும். இடைத்தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை அடுத்தமாதம் 13-ம் தேதி நடைபெறும்.

விக்ரவாண்டி திமுக உறுப்பினர் புகழேந்தி உடநலக் குறைவால் காலமானதால் இத்தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖

திரைப்பட விழா

மும்பை சர்வதேச திரைப்பட விழா செனனையில் நாளை தொடங்கி வரும் 21-ம் தேதிவரை நடைபெறுகிறது.

முதல் முறையாக இவ்விழா சென்னை, கொல்கத்தா, டெல்லி, புனே ஆகிய இடங்களில் நடத்தப்படுவதாகவும், திரைப்பட ஆர்வலர்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கும் தளமாக இது திகழும் என்றும், தேசிய திரைப்பட மேம்பாட்டு கழகத்தின் மண்டல தலைவர் ரோஹினி கவுதமன் தெரிவித்துள்ளார்

இந்தியா மற்றும் சர்வதேச திரைப்பட வல்லுநர்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்த இதன்மூலம் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

சார்லி ஹாமில்டன் ஜேம்ஸின் Billy & Moly திரைப்படத்துடன் இவ்விழா நாளை தொடங்குகிறது

❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயின்று கல்லூரி செல்லும் மாணவர்களுக்கு வரும் ஆகஸ்ட் மாதம் முதல், ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கும் தமிழ்புதல்வன் திட்டம் தொடங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் பள்ளி கல்வித்துறை சார்பில் இன்று நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் உரையாற்றிய அவர், மாநிலத்தில் பள்ளி மாணாக்கரின் கற்றல் திறனை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக கூறினார்.

வகுப்பறைகளை வண்ணமயமாக்கும் வகையில் ஸ்மார்ட் போர்டு திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.

தமிழக மாணாக்கர் உலகளவிலான சவால்களை எதிர்கொள்ள தேவையான கட்டமைப்புகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்

தமிழ்நாட்டில் 78 கோடியே 67 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாநில வேளாண் உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் 3 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பில் 2 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் விதைகள் மானிய விலையில், வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் வழங்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

10 ஆயிரம் ஏக்கர் பயிறு வகைகள் சாகுபடிக்கு 50 சதவிகித மானியத்தில் விதைகள் வழங்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖

சிவசங்கர்

தமிழ்நாட்டில் வரும் செவ்வாய்க்கிழமை முதல் வெளிமாநில பதிவெண் கொண்ட பேருந்துகள் இயக்கப்படுவது கண்டறியப் பட்டால் பறிமுதல் செய்யப்படும் என்று மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், தமிழக பதிவெண் கொண்ட வாகனங்களாக மாற்றப்படும் வரை அப்பேருந்துகள் இயங்க அனுமதி இல்லையென்று திட்டவட்டமாக தெரிவித்தார்.

மாநிலத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகாரின் அடிப்படையில் பழுதான அரசு பேருந்துகளில் பழுது நீக்கம் செய்யப்பட்டு வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖

அமைச்சர்கள்

சென்னை கிண்டியில் சிறு குறு, நடுத்தர தொழில் நிறுவன சங்கங்களின் மானிய கோரிக்கை தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இத்துறைக்கான மாநில அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் தலைமையில் இன்று நடைபெற்றது.

திருச்சி மாவட்டம் லால்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் கட்டப்படவுள்ள புதிய சார்பதிவாளர் அலுவலக கட்டிடம் மற்றும் புதிய பேருந்து நிலைய அமைவிடம் ஆகியவற்றை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு இன்று பார்வையிட்டு ஆய்வுசெய்தார்.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டியில் மூன்று கோடி மதிப்பீட்டிலான சிறிய கைத்தறி பூங்காவை மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு. காந்தி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஐ.பெரியசாமி ஆகியோர் இன்று திறந்து வைத்தனர்.

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகே உள்ள தாதம் பட்டி கிராமத்தில் செயல்படும் ஒருங்கிணைந்த ஜவுளி பூங்காவையும் அமைச்சர் திரு. காந்தி இன்று பார்வையிட்டார்.

❖❖❖❖❖❖

அன்புமணி ராமதாஸ்

தமிழ்நாட்டில் நியாயவிலைக் கடைகளில் பொதுமக்களின் அடிப்படை தேவையான பருப்பு, பாமாயில் உள்ளிட்ட பொருட்களை உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தி உள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தேர்தல் நடத்தை விதிகளை காரணம் காட்டி இப்பொருட்கள் விநியோகம் கடந்த ஏப்ரல் மாதம் நிறுத்தி வைக்கப்பட்டதாக குறைகூறியுள்ளார்.

மேலும் திமுக-வின் தேர்தல் வாக்குறுதியான நியாய விலைக்கடைகளில் உளுந்தம்பருப்பு விநியோகத்திட்டம் இதுவரை செயல்படுத்தப்பட வில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖

ரத்ததானம்

உலக ரத்ததான தினம் இன்று கடைப்பிடிக்கப் படுகிறது.

20 ஆண்டு குருதி கொடையாளர்களுக்கு நன்றி என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும்.

இந்நாளையொட்டி நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

மனித உயிரை காக்க ரத்ததானம் செய்ய அனைவரும் முன்வர வேண்டும் என்று திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர். இ.அருண்ராஜ் வலியுறுத்தி உள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

மீன்பிடி தடைக்காலம்

தமிழகத்தின் கிழக்கு கடற்கரை பகுதிகளில் கடந்த ஏப்ரல் 15-ம் தேதி தொடங்கிய மீன்பிடி தடைக்காலம் 60 நாட்களுக்கு பின்னர் இன்று நள்ளிரவுடன் முடிவுக்கு வருகிறது.

நாளை அதிகாலையிலிருந்து மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்க செல்ல இருப்பதால் விசைப்படகுகள் அனைத்தும் பழுது பார்க்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖

கோவில்

ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோவிலில் தல வரலாற்றை விளக்கும் ராமலிங்க பிரதிஷ்டை திருவிழா இன்று தொடங்குகிறது.

மாலை ராவண சம்ஹார நிகழ்ச்சி நடைபெறுகிறது.

முக்கிய நிகழ்ச்சியான விபூஷ்ணர் பட்டாபிஷேகம் நாளை நடைபெறும்.

❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழ்நாட்டில் அடுத்த 6 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

மன்னார் வளைகுடா, தென்தமிழக கடலோர பகுதிகள், மத்திய வங்கக்கடல், வடகிழக்கு வங்க கடல், ஆந்திர கடல், அரபிக்கடலின் மத்திய பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் வரும் 18-ம் தேதிவரை இதற்குட்பட்ட பகுதிகளுக்கு செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

ஆஸ்திரேலியன் ஓப்பன் பேட்மிட்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் இன்று இந்தியாவின் சமீர்வர்மா - தைவானின் லின் சுன் இ உடன் மோதுகிறார்

மற்றொரு போட்டியில் H.S. பிரணாய் - ஜப்பானின் நரோக்காவை எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖